பலாத்காரம் வளரும் வரலாறு?

Phone No. 4502
விலை அரை அணா]

Regd. No. M. 5458.
[இலங்கை 6 சதம

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (15—10—49) வெளியூர் (16—10—49) [இதழ் 66

தேவை துடுக்கில் முடிகிறது!

சர்க்கரை-உப்பு-தீப்பெட்டித் தந்துவிட்டத் தொல்லை!

துப்பாக்கி அல்ல - தேவைப் பூர்த்திதான் தொல்லையைத் தீர்க்கும்

ஆளவந்தார்கள் அறியவேண்டிய அரிய சம்பவம்

பலாத்காரம் சிலர் தூண்டிவிடப்படுவதால் மட்டும் தீவிரமாகப் பரவிவிடக் கூடியதன்று. சிலரின் விஷமப் பிரசாரத்தின் சக்தியினாலேயே, மக்களிடம், மூண்டுவிடக் கூடியதுமன்று. பலாத்காரத்தை எல்லா மக்களும், எல்லா காலத்திலும் வாழ்த்தி வரவேற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள். மனம்வாக்குக் காயத்தால் அகிம்சையை மேற்கொண்டு ஒழுகவேண்டுமென்று கூறிவந்த காங்கிரஸ்காரர்கள் கூட, 1942 ஆகஸ்ட்டில் பலாத்காரத்தில் ஈடுபட்டது மறக்க முடியாத—மறுக்க முடியாத — மெய்ப்பிக்கப்பட்ட உண்மையாகும். அகிம்சை தத்துவத்திற்குப்புத்துயிரளித்தபெரியவர் காந்தியாரகூட, தற்காப்புக்குத்தடி எடுப்பதுபலாத்காரம் இல்லை என்று சொல்லிவந்ததை நாம் மறந்துவிட்டாலும், நாடு மறந்துவிட்டாலும், காங்கிரஸ் தலைவர்கள் மறந்துவிடாமல் அடிக்கடிப் பேசிவருகிறார்கள் அதுபற்றி.

சூழ்நிலையின் காரணமாக, தேவை ஏற்படுகிறபொழுது, தேவையைச் சாதாரண அன்பு முறைகளால் நிறைவேற்றிக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், தேகத்திடமற்றவர்கள்கூட மிருகசுபாவம் பெற்று, மனிதப் பண்புகளை இழந்து, சொல்லாலும் செயலாலும் பலாத்காரத்தை மேற்கொள்ளும் நிலை பெற்றுவிடுகிறார்கள். எனவே, பலாத்காரம், சூழ்நிலையின் எதிரொலியேயன்றி, மனிதனின் பிறவிப் பண்பல்ல என்பது நூறுக்கு நூறு உண்மையாகும்.

சிலநாளைக்கு முன்பு பம்பாய் நகரில் சர்க்கரைக்குத் தட்டு ஏற்பட்டபோது, ஒரு வண்டியில் ஏற்றிவரப்பட்ட ஓரே ஒரு மூட்டைச் சர்க்கரையைக் கண்டதும் சில பெண்கள், தங்களுக்கு இருந்தத் தேவையின் காரணமாகப் பலாத்காரத்தில்இறங்கினதாகவும்; ஒழுங்கை மீறி சர்க்கரை மூட்டையை அவிழ்த்து, ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கிட்டுக்கொண்டதாகவும், பத்திரிகையிலே பார்த்தோம். கிரிமினல் சட்ட விதிகளின்படி அந்தப் பெண்கள் செய்தது அக்கிரமமானதுதான் இந்த வழிப்பறியைக் கண்ட பம்பாய் போலீஸ், சட்டவிரோதமாகக் கூடினர்கள்—கொள்ளையடித்தல் குற்றம்புரிந்தார்கள் என்று அவர்கள்மீது வழக்குத் தொடுத்ததோ இல்லையோ நமக்குத் தெரியாது.

13—10—49-ல் பம்பாயில், பம்பாயின் வடக்குப்பகுதியிலுள்ள மதுங்காவில், சிலர் இரு கடைகளுக்கு முன்னால் கூடிக்கொண்டு, கடைகள்மீது கல்லெறிந்ததாகவும் சொல்லப்படுகிறது. உப்பு, தீப்பெட்டி, சர்க்கரை முதலிய பொருள்களை, அக்கடைக்காரர்கள் அதிக விலைக்கு விற்க முனையவே, வாங்க வந்த சிறு கூட்டம் வம்பை வாய்ப்பேச்சில் துவக்கியது. பேச்சு வலுக்கவே, மேலும் பலர் அங்கு கூடினர். கூட்டத்தின் சிலர், கடைகளுள் நுழைந்து, அங்கு இருந்தப் பொருட்களைக் கொள்ளையிட்டனர். சிலர் கற்களை வீசினர் கடைகளில்மீது போலீஸ்படை புகுந்தது-ஐந்து முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

சர்க்கரைத் தேவையால் தவிக்கும் மக்கள், பம்பாய்நகரெங்கும் ஆர்பாட்டங்கள் செய்து வருவதாகவும், கடைகளுக்கு முன்பு தங்கள் சர்க்கரைத்தேவையை ஆத்திரமாகத் தெரிவிப்பதாகவும் விபரீதம் நேர்ந்துவிடாமல், பார்த்துக்கொள்ள, பலத்தப் போலீஸ் பாதுகாப்புச் செய்திருப்பதாகவும், வேறு ஒரு செய்தி அறிவிக்கிறது.–

சர்க்கரை வியாபாரிகள் சங்கக் காரியாலயமும், சர்க்கரைக்கிடங்கும் பலத்த ஆயுதம் தாங்கிய போலீஸ் பட்டாளத்தால் பாதுகாக்கப்பட்டு வருகிறதாகவும் தெரியவருகிறது.

நல்ல மக்கள், காலித்தனத்தைக் கனவிலும் கருதாத மக்கள், அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தியடையாத பொழுது, அத்தகைய பலாத்காரத்தில், தங்களையும் அறியாமலே இறங்கிவிடுகிறார்கள் என்பதற்கு இவைகளைவிட வேறு நல்ல எடுத்துக்காட்டு இருக்க முடியாது. அவர்கள் செயல் கண்டிக்கத் தக்கதுதான். சட்டப்படி தண்டிக்கத் தக்கதுதான். எரிகின்ற வீட்டில் பிடுங்கினது ஆதாயம் என்றபோக்கில், இரண்டொருவாகள், பொதுமக்களின் ஆத்திரத்தைச் சாதகமாக்கிக்கொண்டு, களவுத்தொழில் நடத்துவார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் சமூகத்தின் சத்துருக்களாவார்கள். கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்களேயாவார்கள்.

பொருள்களின் விலையைக் கூட்டி விற்றவர்கள்தான், இந்த விரும்பத்தகாத விளைவுகளுக்கெல்லாம் மூலகாரணஸ்தாகள் என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்களின் அக்கிரமச் செயல், சுரண்டும் ஆசை, பொதுமக்களை மாக்களாக மாற்றிவிட்டது என்பதும கவனிக்கத்தக்கது.

மூலநோய் இதுதான். பொதுமக்கள் குழப்பம், இந்த மூலநோயின் அறிகுறி. கூட்டத்தைக் கலைத்ததும், காவல காபபதும், அதற்கெனத் துப்பாக்கிகளை உபயோகித்ததும், அறிகுறியை சில நாளைக்கு அடக்கிவைக்க அல்லது தள்ளிவைக்க எடுத்துக்கொள்ளப்படும் காரியமாகத்தான் முடியும். உண்மையும் அதுதான். துப்பாக்கியின துணை, மூலநோயைக் களைந்துவிடாது. எனவே, சர்க்கார், மூலநோய்க்குமருந்திடும்—அதாவது மக்களுக்குத் தேவையான பொருள்களை, மக்களால் வாங்கக்கூடிய அளவிற்குக் கொண்டுவரவேண்டும். துப்பாக்கி இதனைச்செய்யாது. மந்திரிகளின், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் நாள் தவறாமல் பேசிவரும் பேச்சுக்களும் நல்ல பலனைக்கொடுக்காது. இனியாவது துப்பாக்கியின் துணை நாடுவதை விடுவார்களாக ஆளவந்தார்கள்!

அவர்கள் கெடுத்தது இருக்கட்டும்!

நூற்களைப் பறிமுதல் செய்து தமிழ் சேவை செய்கிறாரோ?

சென்னைமாகாணக் கல்வி அமைச்சர் இப்போது தமிழ் நாட்டில் தம் கோஷ்டியினருடன் 'ஜம்' மென்று பவனி வந்து கொண்டிருக்கிறார். இதன் செலவு முழுவதும் அவருடைய சொந்தச் செலவா? பொதுமக்களுடைய பணப்பையிலிருந்துதானா என்பது அவருடைய பிரயாண அலவன்ஸ் கணக்கு வெளிவந்த பிறகு தெரியும். இப்போது இந்தபவனிக்கு என்ன அவசியம் நேர்ந்து விட்டது என்று பொதுமக்கள் கருதலாம்.

முதலமைச்சர் தூத்துக்குடியில் பேசியபோது, மது விலக்கினால் 17 கோடி ரூபாய் நஷ்டம் என்றும், கல்வி, நீர்ப்பாசனம், போலீஸ், சிறை முதலியவற்றுக்காகப் பணம் தேவைப்படுகிறதென்றும், அதிகச் செலவுகளைச் செய்து கொண்டிருக்கையில் புதியவரிகளைப் போடாதிருக்க முடியாதென்றும், கூறியிருக்கிறாரே! நிலைமை இந்த அழகில் இருக்கும்போது, கல்வி மந்திரி குடும்ப பரிவார சமேதராய்ப் பவனி வந்து கொண்டிருப்பதால் ஏற்படும் செலவு பொதுமக்களின் பணத்தை வீணாக்குவதாகத்தான் ஆகிறதென்று பொதுமக்கள் கருதுகிறார்கள் என்றால் அதில் தவறு ஒன்றுமில்லை.

கல்வி மந்திரி ஊரைச்சுற்றிவந்து ஆகப்போகிறகாரியம் ஒன்றுமில்லை. ஊர்ஊராகப்போவதும், வாழ்த்துப் பத்திரம் முதலியவை பெறுவதும், வரவேற்பு ஆடம்பரங்களைக்கண்டு மகிழ்வதுந் தவிர, மக்களுக்கு நலன் பயக்கத்தக்க உருப்படியான காரியம் ஒன்றுகூட இன்றுவரை ஆகியிருப்பதாகத் தெரியவில்லை.

அதனுடனிருப்பினும் பரவாயில்லை. கல்வி மந்திரி தமக்குத் தெரியாத விஷயங்களையும் அதிமேதாவிபோன்று பேசுவது இன்னும் நகைப்பூட்டக் கூடியதாயிருக்கிறது.

திருவையாற்றுப் பள்ளிக்கூடம் ஒன்றிற்கு இக்கல்வி மந்திரி சென்றிருந்தபோது, அங்கே சுவர்களில் காணப்பட்ட இந்தி எதிர்ப்பு வாக்கியங்களைக் கண்ணுற்றதும, "இத் தமிழ் அன்பர்கள் அவர்களுடைய கட்சி அதிகாரத்திலிருந்த 20-ஆண்டுகளில் தமிழை வளர்க்க என்ன பாடுபட்டார்கள்?" என்று கேட்டு, 'பாரதி பாட்டுகளைத் தடை செய்ததுதான் அவர்களின் தமிழ்த் தொண்டு" என்று தமக்குத் தெரிந்ததைக்கொண்டு முடித்துவிட்டார் இந்த மலையாள மந்திரி.

இன்று தமிழ் நாட்டில் நூல் வடிவில் உலாவும் சங்கத் தமிழ் இலக்கிய நூல்கள் அனைத்தும், வெளிப்படக் காரணமாயிருந்தவர்கள் அத் தமிழன்பர்களே என்பதையும், சமஸ்கிருதத்தின் பெயரால் தமிழைக் கொல்ல முயன்ற பல முயற்சிகளை அழித்துத் தமிழைக் காத்தவர்கள் அத்தமிழன்பர்களே என்பதையும், அந்தத் திருவையாற்றிலே, சமஸ்கிருதத்திற்கு மட்டுமென்று தனியாட்சி செலுத்திக்கொண்டிருந்த கல்லூரியில் தமிழையும் சேர்த்து வைத்தது அந்தத் தமிழ் அன்பர்கள்தான் என்பதையும், தமிழைப் படித்துப் புலவர் பட்டம் பெற, பல்கலைக் கழகங்களில் இடம் ஏற்படுத்தியது அத் தமிழன்பர்களே என்பதையும். காங்கிரஸ்காரர்கள் குழந்தைகள் உளப் பாங்கறியும் அறிவு பெறாதவராய்ச் சின்னஞ் சிறு வயதில் இந்தியைக் கட்டாய பாடமாகப் படிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்திய போது, அதை எதிர்த்து ஒழித்துக் கட்டிய வீர உணர்ச்சியைத் தமிழ்ப் பெருமக்கள் உள்ளத்திலே ஊட்டியது அத் தமிழன்பர்களின் தமிழ் ஆட்சிதான் என்பதையும் இந்தக் கல்வி அமைச்சர் அறிய முடியுமா? இவற்றையெல்லாம் அறிந்துகொள்ளும் ஆற்றல், அவர் ஏதேனும் உண்டா?

அழகிய இராவண காவியத்தை, இரண்யன் நாடகத்தை, இன்னும் பல தமிழர் நூல்களை, தமிழ் நாடகங்களைப் பறி முதல் செய்த அரசாங்கத்தின் கல்வி மந்திரியாயுள்ள இவர்தான், அந்தக் கால அரசாங்கம் பாரதி பாடலைத் தடை செய்ததை எடுத்துக் காட்டத் துணிகிறார் வெட்கமில்லாமல்.

ஆம். இந்த மந்திரி பழைய கதைகளை எவ்வாறு அறிய முடியும்! அறிந்தாலும் முன்னோர்களின் நற்செயல்களைப் புகழ்ந்து பேசும் பண்பு இந்தச் சுதந்திரவீரர்களுக்கு வர முடியாதல்லவா? ஆங்கிலேயர்களைப் புகழும் புத்தி, அவர்களை ஞானாசிரியர்களென்று கூறும் புத்தி, அவர்களோடு தொடர்பு கொள்ள இன்றும் அவதிப்படும் புத்தி, நம் நாட்டவர்கள் செய்த நல்ல வேலைகளைப் புகழ இடந்தருமா?

நாடகம் :: ஆடாதே!

'புரட்சி' என்ற தமிழ் நாடகத்தை, சென்னை மாகாணத்தில் எங்கும் நடத்தககூடாது என்று, சென்னை சர்க்கார் தடுத்து விட்டிருக்கிறது.

நிர்வாகத் திறமை?

★

"யுத்தத்திற்கு முன்னால் நமது மாகாணத்தில்சுமார் 2¼ லட்சம் தறிகள் இருந்தன. ரேஷன் காலத்தில் கூப்பன் கணக்குப்படி இவை ஏறக்குறைய ஐந்து லட்சமாக இருந்தன. பொய்க் கணக்குகளை எடுத்துவிட்டாலும், குறைந்தது இன்று 3 லட்சம் தறிகளாவது இருக்கும். இத்தனைக் குடும்பங்களும் தம ஜீவனத்துக்கு இந்தத் தொழிலையே நம்பியுள்ளன."

—'தினமணி'—

மாலை மணி

சென்னை 15—10—49 சனிக்கிழமை

முகிழ்க்கச் செய்யும் முழக்கம்!

அக்டோபர் 16-ம் நாள்! திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் துவக்கவிழா துவங்கப்படும் நாள்! திராவிடத்தின் திக்கெட்டும் கொண்டாடப்படும் நாள்!

தலைமைக் கழகத்தின் துவக்கவிழா, தலைநகரிலே செப்டம்பர் 18-ம் நாள் நடைபெற்றது—சிறப்புடன்—அழகுடன்—மிக்க ஆர்வத்துடன். அதனையொட்டிக் கிளைக் கழகங்களின் துவக்கவிழாக்கள், நாடெங்கும் கொண்டாடப் பெற இருக்கின்றன, அக்டோபர் 16-ம் நாளில், அமைப்புக் குழு செய்த முடிவின்படி.

அக்டோபர் 16-ம் நாளிலும், அதனைத் தொடர்ந்த பல நாட்களிலும் கொண்டாடப்படும் துவக்க விழாக்களிலே, பங்குகொள்ள, மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டுள்ளார்கள் என்பதை, அவர்கள் ஆர்வத்தைத் தாங்கிக் கொண்டுவந்து, நம்முன் குவிந்து கிடக்கும் முடங்கல்கள் தெரிவிக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள், ஆங்காங்கு தழைத்து நின்று, தூய்மை—கண்ணியம்—நீதி—நேர்மை—நாணயம்—பொறுப்பு—ஜனநாயகம்—கொள்கைப் பற்று ஆகிய பன்னிற அழகு மலர்களைப் பூக்கச் செய்து, முன்னேற்ற நறுமணத்தை அள்ளி வீசிக்கொண்டிருப்பது காண அளவிலா மகிழ்ச்சி கொள்கிறோம்!

சிந்தித்துச் செயலாற்றும் தன்மைபெற்று அனுபவம் வாய்ந்த பெரியவர்கள்—எடுத்த காரியத்தை நேரிய வழியில் நின்று திறன்படச் செய்துமுடிக்கும் கட்டிளங்காளைகள் — கொள்கையின் தன்மையுணர்ந்து, ஜனநாயகப் பண்பு அறிந்து, உலக வரலாறுகளைத் தெரிந்து, எதிர்காலச் சிந்தனைச் சிற்பிகளாகவும், நாட்டை உருவாக்கும் வல்லுநர்களாகவும் விளங்கக்கூடிய மாணவமணிகள்—தன்மானங் காத்துப், பொதுத் தொண்டில் ஈடுபட்டு, நாட்டிற்கு நலன்பயக்கும் ஆர்வங்கொண்டுள்ள வீரர்களைகள்—ஆகிய இவர்களைவரும், கேடில்லா உழைப்பு போன்ற செல்வம் எனக் கொண்டு, உழைத்திட திராவிட முன்னேற்றக் கழகப் பாசறைகளில் வந்து குழுமியுள்ளார்கள். அவர்களைவாழ்த்தும் நம் பாராட்டுதலும் வாழ்த்துதலும்!

திராவிடரின் இலட்சியத்தை, இன்சொல்லால், எழுச்சிக் குரலால், அசைத்துக் காட்டுகிறார் அவர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது, சிறுத்தையே வெளியில் வா—வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும், விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும், சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னை, தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும், காழ்ச் சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்" என்று.

அந்த எழுச்சிக் குரல், காதில் பட்டபட, நாம் அனைவரும், அரசியல் பாசிசத்தையும், பொருளாதார முதலாளித்வத்தையும், சமுதாய வைதிகப்பழமையையும் முறியடித்து முன்னேற்றப் பாதையிலே முனைந்து செல்வோமாக! அதற்கான ஆரம்பம்தான் அக்டோபர் 16!

திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்களும், சொற்பொழிவாளர்களும் கண்ணியத்தைத்தான் கடைப்பிடிப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை; இதுவரையில் கண்ணியத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவே இருந்து வந்துள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களிடத்திலே காணப்படும் கலங்கா உள்ளமும், தடுமாற்ற மற்றத் தன்மையும், கொள்கையிலே கொண்டுள்ள விடாப்பிடியும், நேர்மைக்குப் பாடுபடும் பண்பும், உண்மைகாண விரும்பும் அவாவும், உழைக்கும் திறனும், திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்தோங்கிச் சிறப்புடன் திகழும் என்பதற்கு, உறுதியளிக்கும் உயர்ந்த பண்புகளாக இருந்து வருகின்றன. எனவேதான், "இப்படை தோற்கின், எப்படை ஜெயிக்கும்" என்கிறோம்!

சிவப்பும்-கறுப்பும் இணைந்து நின்று அசையும் கொடியே, நமது இலட்சியக் கொடியாக—தற்காலிகமாக—ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. அக்கொடியை எங்கணும் பறக்கும்படி செய்வதைத், துவக்கவிழா நாளில் கொள்ளவேண்டிய முக்கிய நிகழ்ச்சிகளிலேஒன்றாகக்கருத வேண்டும்.

கொடியேற்றுதல் — ஊர்வலம் நடத்துதல் — பொதுக் கூட்டம் கூட்டுதல் ஆகியவற்றை துவக்கவிழா நாள் நிகழ்ச்சிகளாகக் கொண்டு, கிளைக் கழகங்களை மேன்மேலும் தழைக்கச் செய்ய முன்வந்துள்ள தோழர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். நீங்களனைவரும் ஆட்டு மந்தைகளல்ல — ஆர்வத்தின் சின்னங்கள்! ஆகவே ஆக்க வேலையை ஊக்கமுடன் செய்யுங்கள்.

• அக்டோபர் 16-ம் நாள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழக்கங்கள் திக்கெட்டும் எழும்பும் நாள்! அந்த நாளை முதலாகக் கொண்டு எழும்பும் முழக்கம் இனப் திராவிடத்தை முகிழ்க்கச் செய்யுமாக! வாழ்க திராவிடம்!

கே. கே. நீலமேகம் வேண்டுகோள்

குடந்தை, அக். 15—திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்குழு உறுப்பினர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்கள் அது வருமாறு:—

"சில அலுவல்களின் காரணமாகச் செப்டெம்பர் 19ந்தேதியிலிருந்து இதுநாள் வரையில், தண்டு-கிருஷ்ணா மாவட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இன்று காலை இங்கு வந்து சேர்ந்தேன்.

தஞ்சை மாவட்டத்தில் திராவிடமுன்னேற்றக்கழகச் சம்பந்தமான வேலைகளுக்கும், உறுப்பினர் சேர்த்தல், கிளைக்கழகங்கள் அமைத்தல் ஆகியவைகளுக்கும் என்னிடம் நேரிலோ, கடிதம் மூலமோ தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,
கே. கே நீலமேகம்.
தி. மு. க. அமைப்புக்குழு உறுப்பினர், குடந்தை.

கழகச் சொற்பொழிவாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளராக இருந்து, அழைப்புகளை ஏற்றுப் பணியாற்ற இசைந்துள்ள தோழர்களின் முகவரிகள் கீழே தரப்படுகின்றன அவர்களுக்கு எம் நன்றி!

செயலாளர்,
தி. மு. க. பிரசாரக் குழு
தலைமை நிலையம்.

1. எம். சின்னையா,
நிர்வாகி
"தமிழர் உணவு விடுதி"
செங்கரபட்டு.

2. இரா. துரைராசன்,
சோமரசம் பேட்டை p.o.
திருச்சி.

3. புலவர் ஆறுமுகம்,
ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி
A. 13
சென்னை. 15.

4. அ. தமிழரசு,
வடக்கு ரத வீதி,
பழனி.

5. க. சி. கலியபெருமாள்,
சம்பட்டி புரம்,
விராட்டிபத்து அஞ்சல்,
மதுரை.

6. மா. தங்கவேலர்,
மெயின் ரோடு,
திண்டுக்கல்.

உலக்கூடம்

['சம்மட்டி']

திருமங்கையார் திருவவதாரம்!

திருமங்கையாழ்வார், வைஷ்ணவ குருமார் பன்னிருவரில் ஒருவர். நிரம்பப் பெருமாள்பக்தி உடையவர் அரும்பெருஞ்செயல் புரிந்து வைகுந்த வாசனின் பாதார விந்தங்களை அடைந்தவர்! ஆச்சாரியார் கோபத்திற்கு ஆளாகி இம்சை அனுபவிக்கக் கூடாதென்று எந்த வைஷ்ணவனாவது முடிவிற்கு வந்து, வைகுந்த வாசனை அடைய அவர் மேற்கொண்டு நடந்து காட்டிய 'கைத் தொழிலை' மேற் கொண்டால், இன்று நாட்டில் இருக்கும் சிறைச்சாலைகள் போதாமல், புதிதாகக் கட்ட வேண்டியதுதான் பலப்பல சிறைச்சாலைகளை!

இன்றுள்ள சர்க்காரின் கிரிமினல்சட்டத்திற்குப்பயந்துவைஷ்ணவ சிட்டர்கோடிகள், கண்ணன் கழலடியைப் பெற வேறு வேறு காரியங்களில் ஈடு படுகிறார்கள் என்றும், தான் நடத்திய தொழிலைக் கடைப் பிடித்து, நேரான பாதை வழிச் சென்று வைகுந்தத்தை அடைவதை விட்டு விட்டு, தவறான முறைகளை மேற்கொண்டு ஒழுகி ரௌரவாதி நரகத்தில் இட நெருக்கடி உண்டாக்குகிறார்களே சிட்டர்கோடிகள், அவர்களைத் திருத்தி, வைஷ்ணவம் தழைக்க, வைகுந்தம் சிறக்க, தனது மார்க்கத்தைப் புனருத்தாரணம் பண்ண வேண்டுமென்றும், ..யர்ந்த நோக்கங்கொண்டதாலோ என்னவோ, திருமங்கையாழ்வார் திரும்பவும் திருவவதாரம் செய்திருக்கிறார் பூலோக வைகுந்தமான திருவரங்கத்திலே!

திருமங்கை மன்னன் செயற்கரிய செய்த பெரியார் என்பதை மறந்துவிட்டு, அவர் கையாண்ட முறைகளைத் தண்டனைதரத் தக்க குற்றமாகச் சர்க்கார் கொள்வது கூடாது என்பதை வலியுறுத்தத்தான், மீண்டும் பூலோகத்தில் பிறந்திருக்கிறாரோ என்னவோ அந்த ஆழ்வார், எனக்கு எப்படித்தெரியும்!

திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருவரங்கனின் கோயிலில் களவாட முயற்சிக்கப் பட்டதாகவும், ரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கும் அறைக்கு வெளியில் உள்ள காவல் சிலைகளுக்கு அருகில் இருந்த இரும்புப்பெட்டியில் 'விஷமம்' செய்திருப்பதாகவும், மற்றொரு அறைக்கதவையும் பழுதாக்கி இருப்பதாகவும், பொருள் எதுவும் களவாடப்படவில்லை என்றும், போலீஸ் புலன் விசாரணை தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் பத்திரிகைச்செய்தி ஒன்று கூறுகிறது.

இந்தத் 'திருமங்கைத்தனத்தை'க் கண்டிக்க சர்க்கார் யார் என்று, சர்க்காருக்கு ஏது அதிகாரம் மதசம்பிரதாயங்களில் தலையிட, என்று அங்கு கோவிலில் சிலையாக வைக்கப்பட்டிருக்கும் திருமங்கையாழ்வார் கோபித்துக்கொண்டு, பள்ளி கொண்ட பெருமாளிடம் போய் தொடுத்திருப்பதாகவும், ஆரம்பத்தில் அயர்ந்த நித்திரையில் இருந்துவிட்டதால் பகதனின் கொக்கரிப்பு தம் காதுகளில் விழாமல் இருந்துவிட்டதாகவும், பக்கத்தில் பள்ளி கொண்டிருந்த ஆண்டாள், ஆழ்வாரின் அலறலைக்கண்டு அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து, ஆடையைத்திருத்தம் செய்துகொண்டு, தாங்குமூஞ்சியைத் தட்டித் தட்டி எழுப்பவும், நடந்த சம்பவத்தைக் கேட்ட அரங்கநாதர், அரைத்தூக்கத்திலேயே பேசுகிறார். அதன் சாராம்சம் வருமாறு: தயாரித்தவர் 'சம்மட்டி'யாதான்!

"திருமங்கை மன்னன் தீட்டியநெறி, என் பக்தகோடிகளுக்கென்றே வகுத்த ஒழுக்க மிக்க விதிகளாகும். அதனை மறந்து, வெறும் திருவாய் மொழிகளை மட்டும் என் பக்தர்கள் பாடிக்கொண்டு இருக்கிறார்கள், என் ஆதரவையும் அன்பையும் பெற்று விடுவார்கள் என்ற வீண் நம்பிக்கையால். என்னை வந்தடைய, விரும்புகிறவர்களுக்கு, எனது வைராக்கிய சீலர்கள் நடந்து காட்டிய நற்செயல்கள் தான் முக்கியத் தேவைப்படும் பண்புகளாகும் அதனைக் கொண்டுதான் ஒரு வைஷ்ணவனின் வரவு செலவுக் கணக்கைப் போட்டு, லாபநஷ்டம் பார்த்து, எனது வைகுந்தத்தில் ஒருவனைச் சேர்த்துக் கொள்வது. நான் இன்று, பூலோகத்தில், எனது பக்தர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள், அதிகச் செலவில்லாத பட்டை நாமத்தை உடலெல்லாம் போட்டுக்கொண்டு, எனக்கும் போட்டு என்னை ஏமாற்றி விடலாம் என்று கருதிக்கொண்டு இருக்கிறார்கள். அது மிகவும் தவறு! வெறும் நாமம் போட்டுக் கொள்வதால் மட்டும் என்னை ஏமாற்றிவிட முடியாது வைகுந்தத்திற்கு வந்து சேரவும் முடியாது— அறவே சேர்க்கமாட்டேன்!"

"பொதுவாக எனது ஆழ்வார்களின் செய்கைகளையும், குறிப்பாக திருமங்கையாழ்வாரின் சிறந்த திருத்தொண்டினையும் பூலோகவாசிகள் பயத்தினால் கைவிட்டு விட்டிருப்பதால, அதனை மறுமுறையும் எனது பக்தசிகாமணிகளுக்கான வைஷ்ணவர்களுக்கு உணர்த்தவே, வைஷ்ணவர்களை உய்விக்க வேண்டியே, எனது பள்ளி அறைக்குப் பக்கத்திலுள்ள இரும்புப் பெட்டிகளை எனது பாதுகாப்புப் படையினரை ஏவி, திருமங்கைத்தனம்' செய்யச் சொன்னேன். எனது துவாரபாலகர்கள் காவல் இருந்தும்கூட, இரும்புப் பெட்டி 'திருமங்கைத்தனம்' செய்யப் பட்டு இருக்கிறது என்றால், அதற்கு என் ஆக்ஞை இருக்கிறது என்றுதானே அர்த்தம்? அவ்வாறு செய்ய நான் அனுமதிக்க வில்லையானால், ஒரு காலத்தில் சப்த ரிஷிகளையும் என்னைக் காணவிட மறுத்த துவார பாலகர்களா, இரும்புப் பெட்டியைப் பிறர் தொடுவதைப் பார்த்துக்கொண்டு இருப்பார்கள்? என் விருப்பப்படியும் என் கட்டளைப் படியுந்தான் இந்தத் 'திருமங்கைத்தனம்' நடைபெற்று இருக்கிறது, வைஷ்ணவ ஜீவாத்மாக்கள் நலவழி திரும்ப!"

திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழாக் கூட்டங்கள்

16-10-49

கோவை:— சி.என். அண்ணுதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி.

புதுக்கோட்டை:— (காலை) இரா. நெடுஞ்செழியன்

திருச்சி:— (மாலை) இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு, எஸ். நெடுமாறன், ஜி. பராங்குசம்,

விருதுநகர்:— என. வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தமபி.

மதுரை:— டி. கே சீனிவாசன், எம். அய்யாசாமி, ராஜமான்.

தூத்துக்குடி:— காஞ்சி. கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி, கே. வி. கே. சாமி, எம. எஸ். சிவசாமி

வேலூர்:— சி. பி. சிற்றரசு, கே. ஏ மதியழகன்.

குறிஞ்சிப்பாடி:— காஞ்சி. மணிமொழியார், இரெ. இளம்வழுதி,

தஞ்சை:— ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ, இராமாமிர்தத்தமமையார், எஸ. எஸ். மணி

திண்டுக்கல்:— எஸ். கே. சாமி, தங்கப்பழம், இரா. துரைராசன்

வடக்கனந்தல்:— த. மா திருநாவுக்கரசு

திருச்செங்கோடு:— ஏ. சித்தையன, ஜி. என். ராஜு, எம். எஸ். ராமசாமி

திருவனந்தபுரம்:— க. அன்பழகன, கி. மனோகரன்

17-10-49

ஓமலூர்:— (காலை) சி என். அண்ணுதுரை, ப. கண்ணன்,

சேலம்:— (மாலை) சி. என். அண்ணுதுரை, ஏ. சித்தையன.

கோவில்பட்டி:— காஞ்சி. கல்யாணசுந்தரம், மு. கருணாநிதி, ஈ. வெ. அ. வள்ளிமுத்து.

மாயவரம்:— இரெ. இளம்வழுதி, டி. கே. சீனிவாசன்.

திருப்பத்தூர் (ய ஆ.):— கே. ஏ. மதியழகன், சி. பி. சிற்றரசு.

லால்குடி:— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி

இராமநாதபுரம் (முகவை):— இராமாமிர்தத்தம்மையார்

18-10-49

உடுமலைப்பேட்டை:— சி. என். அண்ணுதுரை, எஸ். ஆர். சுப்பிரமணியம, பி. பழனிச்சாமி

பட்டுக்கோட்டை:— கே. கே. நீலமேகம், என். வி. நடராசன, ஏ. வி. பி. ஆசைததமபி, இரெ. இளமவழுதி, என். எஸ். இளங்கோ

கல்லிடைக்குறிச்சி:— காஞ்சி. கல்யாணசுநதரம்

19-10-49

திருவெறும்பூர்:— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தமபி.

பல்லடம்:— மாலை 3-மணிக்கு — சி. என். அண்ணுதுரை, எஸ். ஆர. சுப்பிரமணியம, பி. பழனிசசாமி. ஜி. என். ராஜு

கருப்பூர்:— மாலை 7-மணிககு — சி. என். அண்ணுதுரை, எஸ். ஆர். சுபபிரமணியம, பி. பழனிச்சாமி. ஜி என. ராஜு

சங்கரன்கோவில்:— காஞ்சி. கலயாணசுந்தரம, எம். எஸ். ராமசாமி, கே வி. கே. சாமி

திருச்சேறை:— ஈ. வெ. கி. சம்பத், எஸ, கே. சாமி

20-10-49

விருத்தாசலம்:— என். வி. நடராசன், எ. வி. பி. ஆசைத்தமபி

21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தம்மையார், எஸ். கே. சாமி

சென்னைமைலாப்பூர்:— இரா. நெடுஞ்செழியன்.

22-10-49

சிதம்பரம்:— ஈ. வெ. கி சம்பத், இராமாமிர்தத்தம்மையார், எஸ். கே. சாமி

ஆற்காடு:— காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன்

23-10-49

காஞ்சிபுரம்:— சி. என. அணணுதுரை, கே. அனபழகன, சததியவாணிமுதது. சி. டி. டி. அரசு. ஏ ஆர வெங்கட்ராமன்.

திருவாரூர்:— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத

திருவண்ணமலை:— சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்

கடலூர் (ஓ டி.):— ஏ சித்தையன. என. வி. நடராசன்

சுண்டக்காமுத்தூர்:— ஜி. என. ராஜு

24-10-49

திருத்துறைப்பூண்டி:— ஈ வெ. கி. சமபத

25-10-49

கூடலூர் (மதுரை):— ஏ. வி. பி ஆசைத்தமபி

தியாகதுருக்கம்:— என. வி நடராசன, ஏ சிதலதயன

26-10-49

தேனி:— ஏ. வி. பி ஆசைத்தமபி

30-10-49

நாகப்பட்டினம்:— இரா நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சமபத, இராமாமிர்தததமமையாா.

பவானி:— மா. இளஞ்செழியன

தற்சரிதை!

"காந்தி ஜயந்தியைக் கொண்டாடுகின்றபொழுது, காந்தியார் எந்தக் கொள்கைக்காக உயிரவாழ்ந்தார், எதற்காகத தம் உயிரையே தியாகம் செய்துகொண்டார் எனபனவற்றை, நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். இவ்வளவும், அவர் பலியான தினத்தில் நமது மனததில் வெகு அழுத்தமாகத் தோனறின. ஆனுல, அநதச் சமபவம் நிகழ்ந்த பதினெட்டு மாதங்களுககுள் அவை அனைத்தையும் மறநதுவிடடோம். சொந்தக் கேடுகளைக் களைந்துகொள்ளவோ அல்லது சுயநல வெற்றிக்காகவோ மட்டும, மக்கள் அவருடைய திருநாமத்ததைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்."

—பட்டேல்—

தன் மதிப்புத் திராவிட இளைஞர் முன்னேற்றக்கழகம்

திருவோத்தூர், அக். 3— இன்று மாலை 7மணிக்கு ஷை கழகத்தின் செயற்குழுக் கூட்டம் கூடியது. திராவிடர் கழகநிலை குறித்து விவாதித்துப் பின்பு, த. ம. தி. இ. கழகத்தைக் கலைத்து விட்டு, த. ம. தி. இ. முன்னேறறக்கழகம் என நிறுவுவதென்று பெரும்பாலோரால் தீர்மானிக்கப்பட்டது. பெரியார் தலைமையினின்று ஷை கழகம் விலகுவதாகவும், தி. மு. கழகத்துடன் இணைந்து பணியாற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டு கீழ்க் காணும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:— தி. வே. இராதாகிருஷ்ணன். துணைசசெயலாளர்:— துரை. முருகேசன்; பொருள் உறுப்பினர்:— தி. சு. இரத்தினவேலு; விளம்பர உறுப்பினர்:— போ. முனிசாமி. ஏனைய செயற்குழுவினர்:— போ. கா. இராமன், வே. சி. அருணசலம், மு. கன்னியான், கோ. இராகவன், வ. கோ. கன்னியாள், ஐ. வே. சுந்தரம், சோ. பொ. பச்சையப்பன், வ. பூ. காஙகன். பின்பு செயலாளர் நன்றி கூறக்கூட்டம் முடிவுற்றதெனத் தோழர் கொ. பொ. முனிசாமி (வி. உறுப்பினர்) தீட்டுகிறார்.

புத்தகம் படிக்காதே!

சென்னை மறுமலர்ச்சி நூல் நிலைய வெளியீடான, "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?" என்ற, 'வியாழன்' எழுதிய நூலை, சென்னை சர்க்கார் பறிமுதல செய்துவிட்டது.

இனி நடப்பவை

திருச்சி-திருச்சி மலைக்கோட்டை அரசமரத் தெருவில் 16-10-49 ஞாயிறு காலை 9மணிக்கு 'திராவிட முன்னேற்றக் கழகட-திருசசி நகர மலைக் கோட்டை உட்கிளை'யினின் ஆதரவில் கழகக் கொடி யேற்று விழா நடைபெறும்.

*   *   *

விருகமபாக்கம்— இவ்வூர் திராவிட இளைஞர் படிப்பகத்தின் சார்பில் 16-10-49 ஞாயிறு மாலை 6 மணிக்குத் தோழர் தி. சா. மன்னர் மணி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அது போது தோழர்கள் கிருட்டின மூர்த்தி, இரஙகநாதன் ஆகியோர் "திராவிட முன்னேற்றக கழகத்தின் தேவை" என்பது குறித்துப் பேசுவர்.

*   *   *

திண்டுக்கல்—திராவிட முன்னேற்றக் கழகம்-திண்டுக்கல் நகரக் கிளையின் துவக்க விழா 16-10-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு இவ்வூர் மாரியம்மன் திடலில், தோழர் என். முத்து தலைமையில் நடைபெறும். அது போது தோழர்கள்:- எஸ். கே. சாமி, இரா. சு. தஙகப்பழம், மா. தஙகவேல், பி. சமதர்மம், எம். பரமசிவம் ஆகியோர் சொறபொழி வாற்றுவர். தோழர் இரா. துரைராசன் பி. ஏ., கொடி யேற்றுவார்.

*   *   *

வந்தவாசி—வந்தவாசி திராவிடர் கழகத்தின் கூட்டமொன்று 16 10-49 ஞாயிறு மாலை 6மணிக்கு வந்தவாசி பாக்குக்கார வீதியில் உள்ள ஈ. தஙகவேலு அவர்கள் இல்லத்தில் அன்னார் தலைமையில் நடைபெறும். அது போது ஷை கழகத்தின் எதிர் கால நிலை குறிதது நிர்ணயிக்கப்படும். எனவே அனைவரும் வரும்படித் தோழர் வி. டி. அண்ணமலை (தி. க. செயலாளர்) அழைக்கிறார்.

*   *   *

மாயவரம்— திராவிட முன்னேற்றக் கழகம்— மாயவரம் நகரக் கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டம், 17-10-49 திஙகள் மாலை 5-30 மணிக்கு இவ்வூர் நகராண்மைக கழகப் பூஙகாவில், தோழர் ஆர் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். அது போது தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன், இரெ. இளம்வழுதி ஆகியோா சொறபொழிவாற்றுவர்.

*   *   *

கோவில்பட்டி—திராவிட முன்னேற்றக் கழகம்—கோவில் பட்டி நகரக் கிளையின் ஆரம்பவிழாப் பொதுக் கூட்டம் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் 17-10-49 மாலை 6-மணிக்கு நடைபெறும. அது போத தோழர்கள முு. கருணநிதி, காஞ்சி. கல்யாண சுந்தரம், செ. அருணசலம. மற்றும பலர் சொற்பொழி வாற்றுவர்.

*   *   *

சேலம்—17-10-49 திஙகளன்று தோழர் சி. என். அண்ணுத்துரை அவர்கள இந் நகரில் கீழககண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார். காலை 8 மணிக்கு அம்மாபேட்டை மெயின் ரோடிலுள்ள தி. மு. க கிளை அலுவலகத்தில் கொடியேற்று விழா. காலை 8-30க்கு ஓமலூர் தி. மு கழகக் கிளைத் துவக்க விழா மாலை 3 மணிககுசெவ்வாய்ப் பேட்டை வாசகசாலைத் தெருவில் தி. மு. க. கொடி யேறறுவிழா. மாலை 4 மணிக்கு சேலம் கல்லூரித் தமிழ்ப்பேரவையில்சொற்பொழிவு. மாலை 6 மணிக்கு இந்நகர் விகடோரியா மார்க்கெட் மைதானத்தில் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் பொதுக் கூடட ம. தோழர். ஏ. சித்தையன் அவர்களும்பொதுக்கூட்டத்திலபேசுவார்.

*   *   *

பட்டுக்கோட்டை—திராவிட முன்னேற்றக் கழகம் — பட்டுக்கோட்டை நகரக் கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டம இவ்வூர் காசாஙகுளம் வட கரையில் 18-10-49 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு நடைபெறும். அதுபோது செஙகப் படுத்தான் காடுத் தோழர் பி. ரெஙகசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் கே. கே. நீலமேகம், என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைததம்பி, இரெ. இளம்வழுதி ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

*   *   *

கொழும்பு— இலஙகை திராவிர் கழகத்தின் மத்திய செயற்குழுக் கூட்டமொன்று 19 10-49 ஞாயிறு மாலை 3-மணிக்கு, கொழும்பு ஆட்டுப்பட்டித்தெரு பெண்கள் உயர் நிலைப்பள்ளி மண்டபத்தில் நடைபெறும். அதுபோது தீர்மானிக்க வேண்டிய கீழ்ககண்ட மூன்று தீர்மானஙகளைததோழர் மா. இளஞ்சேரன் (இ. தி. க. செயற குழு உறுப்பினா) அனுப்பி முன்னறிவிப்பு செய்துள்ளார். எனவே செயற்குழு உறுப்பினாகளைவரும் தவறாது வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள். தீர்மானஙகள்:—

1. பெரியார் ஈ. வெ. ரா. தமது 72-வது வயதில் இயக்கக் கொள்கைக்கு மாறுகவும், திராவிடப் பெருஙகுடி மக்களின் வேண்டுகோளை அலட்சியப்படுத்தியும்தோழியர் மணியம்மையாரைப் பொருந்தாத் திருமணம செய்துகொண்டதைக் கண்டிப்பதோடு, அன்னார் தலைமையில் நம்பிக்கையில்லை எனத் தெரிவிப்பது.

2. திராவிடர் இயக்கக் கொள்கைளில் தீவிரப்பற்றுள்ளத்தோழர்கள் கூடி திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துப் பணிபுரிய முன்வந்திருப்பதைப் பாராட்டுவது.

3. இதுவரை இலஙகை திராவிடர் கழகம் என அழைத்துவந்த இக்கழகத்தை, இனிமேல் 'இலஙகை திராவிட முன்னேற்றக் கழகம்' என மாற்றி அமைப்பது எனத் தீர்மானிப்பது. என்றுதோழர் ஏ எம். அந்தோனிமுத்து (இ. தி. க. செயலாளர்) எழுதுகிறார்.

*   *   *

திருச்சேறை — திராவிட முன்னேற்றக்ழகம்—திருசசேறைக் கிளையின் சிறப்புக் கூட்டம் 16-10-49 மாலை 6 மணிக்கு இவ்வூர் மேட்டிருப்பு 1-41 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும. அதுபோது தி. மு. கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டத் தோழர்களும, உறுப்பினராகச் சேர விருப்பமுள்ளோரும், ஷை கூட்டத்தில் கலந்துகொண்டு புதிய செயற்குழுவினைத் தேர்ந்தெடுக்கும்படியும் ஷை கழகத் துவக்க விழாவைச சிறப்பிககும் படியும் தோழர் பா. செஙகுட்டுவன் (தற்காலச்செயலாளர்) வேண்டுகிறார்.

என்ன வேலை?

"பண்டித நேருவின் வருகையைக குறித்து அமெரிக்காகள் தலைகால தெரியாமல் கும்மாளம் அடிப்பதற்கு முன, முதலில அவா எனன வேலையாக இஙகே வந்திருக்கிறார் எனபதை அறிந்து கொள்ளவேண்டும."

—நியூயார்க்டெய்லிநியூஸ்.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

மார்த்தாண்டன்பட்டி—சிற்றூர்க்கிளை

மார்த்தாண்டன்பட்டி, அக். 10—

இவ்வூர் பகுத்தறிவுத் திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் த. காசி விசுவநாதம் அவர்கள் தலைமையில் 9—10—49 அன்று நடைபெற்றது. அதுபொழுது, டி கழகம் "திராவிட முன்னேற்றக்கழகம்—மார்த்தாண்டன்பட்டிச் சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப் பட்டுப் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்:—த. சோலை நாராயணன்; துணைச் செயலாளர்:—கு. செல்லையா விளம்பர உறுப்பினர்:—மு. தங்கசாமி. ஏனைய செயற் குழுவும் அமைக்கப்பட்டு, கொடியேற்று விழாவுக்குப்பின் கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் த. காசி விசுவநாதம் எழுதுகிறார்.

* * *

வேட்டைக்காரன் புதூர்—சிற்றூர்க்கிளை

வேட்டைக்காரன் புதூர், அக.10—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம தோழர் அ. முத்து மாணிக்கம் தலைமையில் 9-10 49 அன்று நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக கழகம வேட்டைக்காரன புதூர், சிற்றூர்க்கிளை அமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கபபட்டனர்.

செயலாளர்:—கு. நடராசன்; துணைசெயலாளர்:—வே.ம.தமபி. பொருள் உறுப்பினர்:—அ. முத்து மாணிக்கம், விளம்பர உறுப்பினர்:- ஆ. சின்னுசாமி. ஏனைய செயற் குழுவினர்:—கனக சுப்பிரமணியம், சதாசிவம், சண்முகம், இராசாராமன், வ. விசுவநாதன், ஆ. கார்த்திகேயன், து. முருகேசன், கோ. சென்ன கிருட்டினன், மு. சின்ன தம்பி, பெ. நாகராசன், கு. பொன்னுசாமி, ஆ. கிட்டு; சு. முத்துசாமி, சு. தங்கவேலு. பொ. தருமராசு, பொ. துரைசாமி, நா.நாராயணன், கு. முத்துசாமி. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

பலராமபுரம் (மலையாளப்பகுதி)—சிற்றூர்க்கிளை

பலராமபுரம், அக. 10—

தென் திருவாங்கூர், பலராமபுரம தி. கழகச செயற்குழுக் கூட்டம 7—10—49 அன்று தோழர் ஆ. அருணாசலம் தலைமையில் கூடிற்று. அதுபொழுது தி. கழகச செயறகுழுவினர் தீர்மானத்திற்கிணங்க டி கழகம் கலைக்கப்பட்டு "திராவிட முன்னேற்றக்கழகம்—பலராமபுரம் சிற்றூர்க் கிளை" அமைக்கப்பட்டது. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:— வ. அருணாசலம்; பொருள் உறுப்பினர்:—மா. நாயனார்; விளமபர உறுப்பினர்-நா. ராகமணி, திராவிடர் கழகத்தின் பொருள், தளவாடங்களனைத்தும் தி. மு. கழகத்திற்கு மாற்றப்பட்டது. எனத் தோழர் வ. அருணாசலம் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

வீரசிகாமணி—சிற்றூர்க்கிளை

வீரசிகாமணி, அக். 10—

சங்கரன்கோயில் வட்டம் வீரசிகாமணி தி. மு. கழக அமைப்புக் கூட்டம 2-10-49 இரவு தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் தலைமையில் நடை பெற்றது "கழகத் தோழர்கள பணி" என்பது குறித்துத் தோழர்கள் ஆனந்தராஜு, மாடசாமி, கருத்துடையார் ஆகியோர் பேசியபின் "திராவிட முன்னேற்றக் கழகம் — வீரசிகாமணி சிற்றூர்க்கிளை" அமைக்கப்பட்டது. பின்பு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—தளவாய், துணைச் செயலாளர்:—மாடசாமி; பொருள் உறுப்பினர்:-ஆனந்தராஜு; விளம்பர உறுப்பினர்:- க. முத்தையா.

ஏனைய செயற்குழுவினர்கள்:— எஸ். கிருஷ்ணசாமி, கு. காசி, சவரிமலையான், நெல்லையப்பன், அப்பாசாமி, அங்கப்பன், மா. முத்தானந்தம், கனகராஜு; உடையார்சாமி, பெ. சுப்பையா, சி.சங்கையா, மா. முத்தையா, இரா. சத்திய நாதன், ச. சாலமோன். பின்பு செயலாளர் நன்றி நவில, கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

இராஜபாளையம்—நகரக்கிளை

இராஜபாளையம், அக். 10—

இந்நகர் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் இரா. துரைராசன் தலைமையில் 2-10-49 கூடிற்று. அது போது தோழர் த. கனகசபாபதி அவர்களால் பெரியார் அவர்கள் செய்து கொண்ட திருமண ஏற்பாட்டைக்கண்டித்தும் திராவிடர் கழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகமாக மாறறவும் கொண்டு வரப்பட்டத் தீர்மானங்களை பெருமபான்மையான உறுப்பினர்களின் விருப்பத்திற்கு மாறாகத் தலைவர் நிறைவேற்ற அனுமதியளிக்க மறுத்துவிட்டார். எனவே இது பறறி மற்றொரு கூட்டம 9—10—49 மாலை 4 30மணிககுத் தோழர் ஆ. சோ. சேதுராமன் தலைமையில பெரியார் சவுககத்தில் நடைபெறறது. அது பொழுது பெருமபான்மையினரின் விருப்புக்கு எதிராகத் தீர்மானங்களை ஒட்டுக்கு விட மறுத்ததால் தி. க. தலைவரான தோழர் இரா. துரைராசன் மீது நம்பிக்கை இல்லையென்று தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டது. தோழர் இரா. துரைராசன் நாணயமற்று நடந்துகொண்ட போக்கையும், கழக நடவடிக்கைப் புத்தகங்களை அவர் எடுத்துச்சென்றதையும் கண்டிப்பதாக ஓர் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. பின்பு, பெரியார் அவர்கள் செய்து கொண்ட திருமண ஏற்பாட்டையும், அதன் பின் அவர் கொண்ட போக்கையும் கண்டித்துத் தோழர் த. கனகசபாபதியால் முன் மொழியப்பட்டுத், தோழர் பி. ரத்தினசாமியால் வழிமொழியப்பட்டுத தீர்மானம் நிறைவேறிற்று. இதை ஒருவர் தவிர ஏனையோர் ஆதரித்தனர்.

நகர திராவிடர் கழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றி டி கழகத்தின் பொருள் மற்ற தளவாடங்களையும் தி. மு. கழகத்திறகே உரிமையாக்குவது பற்றிய தீர்மானம் தோழர் ஆர்.பி. ஆதிநாராயணனால்கொண்டு வரப்பட்டுத், தோழர் க. திராவிடமணியால் வழிமொழியப்பட்டு, இருவர் மட்டும இதை எதிர்கக, மற்றையோரின் ஆதரவால் நிறைவேற்றப் பட்டது. பிறகு தறகாலிகமாக ஓர் செயறகுழு அமைக்கப்பட்டது.

செயலாளர்- ஆ. சோ. சேதுராமன். மற்றத் துணை உறுப்பினர்கள்:— த கனகசபாபதி, கா திராவிடமணி, பி. ரத்தினசாமி, ம. பொன்னையா, மா. கணபதி, கோ. சந்திரன். இறுதியாகத் தோழர் கா. திராவிடமணி நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது. எனத் தோழர் பி. ரத்தினசாமி எழுதுகிறார்.

* * *

கணியூர்—சிற்றூர்க்கிளை

கணியூர், அக். 10—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புககூட்டம் 9—10—49 மாலை 7 மணிககுத தோழர் கே. ஏ. அருணாசலம் அவர்கள் தலைமையின் கீழ் இவ்வூர் "விக்டரியில்"வில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசியபின்பு, "திராவிட முன்னேறறக கழகம்—கணியூர்ச் சிற்றூர்க்கிளை" அமைக்கப்பட்டு ஓர் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. ஏ. முருகேசம்; துணைச்செயலாளர்:—கே. என். ஏ. முத்து; பொருள் உறுப்பினர்:—டாக்டர். பி. எம. முகம்மது; விளமபர உறுப்பினர்:- கே. எஸ். எம். யூசுப். ஏனைய செயலுறுப்பினர்கள்:—எம். உதுமான். கே. ஏ. அருணாசலம், கே. எஸ். முகம்மது அனீபா, டி. ஏ. அப்துல் ஜப்பார், கே. பி. செங்கமலை, ஈ ஆர். இராதா, மு. ஆறுமுகம், க திருமலைசாமி. பின்பு பல தீர்மானங்கள் நிறை வேறறப்பட்டுத் தோழர் கே. என். ஏ. முத்து நன்றி கூறக், கூட்டம் முடிவுறறது. என விளம்பர உறுப்பினர் தீட்டுகிறார்.

* * *

பொம்மெயகுப்பம்—சிற்றூர்க்கிளை

பொம்மெயகுப்பம், அக். 11—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம தோழர் அ. வையாபுரி தலைமையின்கீழ், 10-10-49-ல் நடைபெற்றது. அப்பொழுது "திராவிட முன்னேற்றக் கழகம்—பொம்மெயகுப்பம் சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டுக், கீழ்க்கண்ட செயற் குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- ஆர். கோவிந்தராஜு; துணைச்செயலாளர்- எம. அண்ணாமலை; பொருள் உறுப்பினர்- அ. வையாபுரி; விளம்பர உறுப்பினர்- பி. சின்னராஜு. ஏனைய செயலுறுப்பினர்கள்- மதியழகன், மணிமொழி, பிரகாசம், ரத்தினம். மேற்கொண்டு சிலரையும் சேர்த்துக்கொள்ள உரிமை வழங்கப்பட்டது. பின் செயலாளர் நன்றி நவிலக், கூட்டம் முடிவுற்றது. எனச் செயலாளர் வரைகிறார்.

* * *

காரைக்குடி—நகரக்கிளை

காரைக்குடி, அக். 11—

இந்நகர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் அ. சுப்பு அவர்கள் தலைமையில் தோழர் ராம. சுப்பையா அவர்கள் (சமதர்மம நிலையம்) இல்லத்தில் 9-10-49 இரவு நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—காரைக்குடி நகரக் கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- எஸ். இப்ராஹிம்; துணைச் செயலாளர்- தா. வெள்ளசசாமி; பொருள் உறுப்பினர் - அ. சுப்பு; விளமபர உறுப்பினர்கள்:— சி. ஜெகன்னாதன், க. இராமையா. ஏனைய செயற்குழுவினர்:— ராம. சுப்பையா, அ. நடராசன், த. மாரியப்பன், அ. மீனாட்சிசுந்தரம், சு. கணேசன், க. அ. கணபதி, கி. இ. பாண்டியன், சி. நடராசன். பின் ஒரு தீர்மானம்நிறைவேற்றப்பட்டுச் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவடைந்தது. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம்

★

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

181

"மாலை மணி"

20—10—49 முதல்

அதிகப் பக்கங்களோடு வெளிவரும்

விலை அணா ஒன்று

ஏஜண்டுகளுக்கு ;— "மாலை மணி" ஏஜண்டுகள் 20—10—49 (சென்னை) 21—10—49 (வெளியூர்) முதல் "மாலை மணி" பிரதி ஒன்று, ஒரு அணா வீதம விற்கவேண்டும். ஏஜண்டுகள் தேவைக்குரிய பிரதிகளுக்கு 18—10—49-க்குள் தெரிவித்துக்கொள்வதுடன், பிரதி ஒன்றுக்கு ரூ 2—8—0 வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.

சந்தாத் தோழர்களுக்கு:—"மாலை மணி" சந்தாதாரர்கள், தாங்கள் அனுபபியுள்ள சந்தா தொகைக்குரிய பத்திரிகைகள் மட்டும், 20—10—49 முதல் அனுப்பபபடும். தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரையில் பத்திரிகை அனுப்பப்படவேண்டுமானால், அதற்குரிய அதிகப்படியான தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.

* * *

மாதவரம்—சிற்றூர்க் கிளை

மாதவரம், அக. 10—

இவ்வூர் திராவிடர் கழகச்செயற்குழுக் கூட்டம் 25-9 49-ல் கழகக் கட்டடத்தில் தோழர் வி. ஜெயராஜ் தலைமையின்கீழ் நடைபெற்றது. அதுபோது திராவிடர்கழகம, "திராவிட முன்னேற்றக் கழகம் — மாதவரம் சிற்றூர்க் கிளை" என மாற்றப்பட்டு ஓர் புதிய செயற குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:— ம சம்பந்தன்; துணைச செயலாளர்- கா. கோவிந்தசாமி; பொருள் உறுப்பினர்- தே. தேசிங்; விளம்பர உறுப்பினர்- வ. ஜெயராஜ். ஏனைய செயற்குழுவினர்:— கன்னையன், பி. ஈ. வீரராகவன், குப்புசாமி. வேதாசலம், வேணு, ரங்கநாதன். ஆறுமுகம, முருகானந்தம், லாரன்ஸ். எனத் தோழர் ஜெயராஜ் (வி. உறுப்பினர்) தீட்டுகிறார்.

* * *

குள்ளம்பட்டி—சிற்றூர்க் கிளை

குள்ளம்பட்டி, அக். 10—

இவ்வூர் திராவிடர்கழகச் செயற்குழுக் கூட்டம் க. பெ. முத்து அவர்களின் தலைமையில் 7 10-49 அன்று நடைபெற்றது. அதுபோது திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம—குள்ளம்பட்டிச சிற்றூர்க் கிளை" என மாற்றியமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—ப. இராமலிங்கம்; துணைசெயலாளர்:— ப. காசிலிங்கம; பொருள் உறுப்பினர்:—க. பெ. முத்துசாமி; விளம்பர உறுப்பினர்:—ர. வரதராசன்; ஏனைய செயற்குழுவினர் :—சி. முத்து, சி. கந்தன்; பெ. அய்யண்ணன். எனத் தோழர் ர. வரதராசன் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

கொண்டயம்பட்டி—சிற்றூர்க்கிளை

கொண்டையம்பட்டி, அக. 10—

9-10 49 அன்று தோழர் எஸ். ஆறுமுகம அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் இவ்வூர் வள்ளுவர் மன்றம, "திராவிட முன்னேற்றக்கழகம் கொண்டயம்பட்டி சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—சி. வீரபத்திரன்; துணைச்செயலாளர் :— எஸ்.பி.ஆர். மலைச்சாமி; பொருள் உறுப்பினர் :- பி. பெருமாள்; விளம்பர உறுப்பினர்:—பி. கன்னியப்பன்; ஏனைய செயற்குழுவினர்:-எஸ். ஆறுமுகம், எஸ்.வெள்ளைச்சாமி, ஏ.ராமலிங்கம், கே.கே. இராசாங்கம், சு. பொன்னுசாமி, பி. பழனிச்சாமி, பி. தனுஷ்கோடி, சி. பாலுச்சாமி. பின் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. என உதவிச்செயலாளர் வரைகிறார்.

* * *

மாதப்பூர்—சிற்றூர்க்கிளை

மாதப்பூர், அக். 11—

பல்லடம் தாலுகா மாதப்பூரில் 10-10 49 அன்று தோழர் பல்லடம் பொன்னுசாமி அவர்கள் தலைமையில் தி. மு. கழக அமைப்புக்கூட்டம் நடை பெற்றது. அதுபோது தோழர் அங்கப்பன் "கழக இலட்சியம்" என்பது குறித்துச்சொற்பொழிவாற்றினர். பிறகு "திராவிட முன்னேறறக கழகம்—மாதாப்பூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு ஓர் புதியசெயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர் :— கு. அங்கப்பன்; துணைச் செயலாளர் :—மு. சீனிவாசன்; பொருள்உறுப்பினர்:—நா. பழனிச்சாமி; விளம்பர உறுப்பினர்:—சு. வெங்கட்ராமு. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

பொழுது போக்கு

தமிழ் — நாடகம்

ஒற்றைவாடை	உயிரோவியம்

தமிழ்—சினிமா

சித்ரா	மங்கையர்க்கரசி
பிரபாத்	,,
மகாராணி	,,
சரஸ்வதி	,,
லட்சுமி	மாயக்குதிரை
ஸ்டார்	,,
கிரௌன்	,,
கெயிட்டி	ஹரிதாஸ்
சினிமா சென்ட்ரல்	ஞான சௌந்தரி
சன்	மோகினி

தெலுங்கு

பாரகன்	லைலா-மஜ்னு
கபாலி	துரோகி

இந்தி

வெல்லிங்டன்	டில்-கி-துனியா
செலக்ட்	மேலா
பிராட்வே	பரி பஹாரன்

ஆங்கிலம்

Midland	The Blue Lagoon
New Globe	Jungle Jim Johnny Weissmuller
Casino	Too late For Tears
New Elphinstone	Jesse James Rides Again
Roxy	Road to Rio
Minerva	The Vigilantes Return

சந்தா விவரம்

20—10—49 முதல்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சநதா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திறகு குறைந்த சந்தா ஏற்றுககொள்ளப்பட மாட்டாது.

மானேஜர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1